# மாங்காடு நகராட்சி
# ஜனவரி 2023 நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் நவம்பர்–2022 மற்றும் டிசம்பர்–2022 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான நவம்பர்–2022 மற்றும் டிசம்பர்–2022–ம் மாதங்களுக்கான வரவுகள் மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மற்றும் அரசாணைகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2021–2022ன் கீழ் புதிய நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணிக்கு மண் பரிசோதனை செய்தது அறிக்கை தயார் செய்தது, அண்ணா பல்கலை கழகம் கிண்டி அவர்களுக்கு கட்டணம் ரூ.2,47,800/– மற்றும் S.M.அசோசியேஷன் நிறுவனத்திற்கு ரூ.1,59,300/– மொத்தம் ரூ.4,07,100/– பொது நிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

**பொருள் எண்.5**

மாங்காடு நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.TN85B0500 வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் FC பெறுவதற்கு வாகனப்பதிவு மற்றும் பழுதுபார்த்து சான்றிதழ் பெற செலவினம் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வரும் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தபுள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | பொது சுகாதார வாகனம் எண்.TN85B0500 வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் FC வாகனப்பதிவு மற்றும் பழுதுபார்த்து சான்றிதழ் பெறுதல். | திருவாளர் KJ பாடி ஒர்க்ஸ் | **ரூ.3,36,300/-** |
| | | திருவாளர் ARV பாடி பில்டர்ஸ் | **ரூ.3,51,994/-** |

பொது சுகாதார பணிகள் அவசியம் கருதி மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர் KJ பாடி ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியமைக்கும், மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.6**

மாங்காடு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மாங்காடு நகராட்சியில் உள்ள 27 வார்டுகளிலும் **100**சதவீதம் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத (Open Defecation Free) நகராட்சியாக சுய பிரகடனம் செய்ய நாளிதழ்களில் விளம்பரம் செய்தது விளம்பர கட்டணம், தினத்தந்தி நாளிதழுக்கு ரூ.**9240/-**, தினமலர் நாளிதழுக்கு ரூ.**9600/-**வீதம் மொத்தம் ரூ.**18,840/-** பொது நிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.7**

மாங்காடு நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் மத்திய அரசின் MOHUA துறையின் கீழ் ஸ்டார் ரேட்டிங் சான்று பெற ஒவ்வொரு நகராட்சியிலும் குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free city) மூன்றாம் நட்சத்திர அங்கீகாரம் பெற பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆட்சேபனைகள் பெற **26.11.2022** அன்றைய தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்தது விளம்பரக்கட்டணம் ரூ.**9600/-** பொது நிதியில் வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.8**

மாங்காடு நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்ய திட்டத்தின் கீழ் ராமகிருஷ்ணபுரம் திடக்கழிவு வளம் மீட்பு பூங்கா எதிரில் உள்ள இடத்தினை சுற்றி சுற்று சுவர் அமைக்கும் பணிக்கு 15.12.2022 அன்று பின்வரும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | ராமகிருஷ்ணபுரம் வளம் மீட்பு பூங்கா அருகில் சுற்றுசுவர் அமைத்தல் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைத்தல் பணி | 43,71,000/– | திருவாளர் தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.050% குறைவு |
| | | | திரு.எம்.என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 1.05 % அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர் ஆர்.பி.அன் சன்ஸ் நிறுவனத்தின் ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.9**

மாங்காடு நகராட்சியில் கலைஞர் நகர்புற திட்டம் 2022–2023ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள 15.12.2022 அன்று பின்வரும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருக்குளம் மேம்பாடு பணி | 1600000/– | திரு.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.07% குறைவு |
| | | | மோகன் கான்டிராக்டர் | மதிப்பீடு தொகையை விட 0.010% அதிகம் |
| 2 | திருவள்ளுவர் சிட்டி பேஸ்–II பூங்கா மேம்பாடு பணி | 2600000/– | மோகன் கான்டிராக்டர் | மதிப்பீடு தொகையை விட 0.05% குறைவு |
| | | | திரு.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 1.05% அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களுக்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையினால் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள நீரினை 45HP குதிரை திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் மூலம் வெளியேற்ற மதிப்பீடு ரூ. 11.60 லட்சத்துக்கு இவ்வலுவலக விலைப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.690/2022/அ1, நாள்.27.10.2022ன்படி விலைப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி 30.10.2022 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | விலைப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | தாழ்வான பகுதிகளில் மழை வெள்ள நீரை வெளியேற்ற 45HP குதிரை திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் மூலம் வெளியேற்றும் பணி | திரு.சற்குணன்<br>ஒத்தவாடைதெரு, மாங்காடு,<br>சென்னை–600122. | மதிப்பீடு தொகையை விட 0.04% குறைவு |
| | | திரு.ஜி.கார்த்திகேயன்<br>மாங்காடு,<br>சென்னை–600122. | மதிப்பீடு தொகையை விட 0.01% அதிகம் |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.சற்குணன் என்பவருக்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகராட்சி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது நிதியில் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்டுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவ மழைக்கு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின்படி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பேரிடர் மேலாண்மை பணிகள் என்பதால் மழைவெள்ளத்திலிருந்து பொது மக்களை பத்திரமாக மீட்கும் பணிக்கு சென்னை நைனார் குப்பத்திலிருந்து மீன்வளத்துறை மூலம் மீனவர்களின் மூன்று படகுகள் லாரியில் கொண்டு வந்தது மற்றும் மழை முடிந்தவுடன் மூன்று படகுகளை மாங்காட்டிலிருந்து நைநார்குப்பத்திற்கு லாரியில் கொண்டு சென்றது லாரி வாடகை ரூ.9000/–வழங்கியது மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.12**

மாங்காடு நகராட்சியில் வடகிழக்கு பருவ மழையினால் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள நீரினை 45HP முதல் 100 HP குதிரை திறன் கொண்ட டீசல் மோட்டார்கள் மூலம் வெளியேற்ற மதிப்பீடு. ரூ.12.00லட்சத்துக்கு இவ்வலுவலக விலைப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.690/2022/அ1, நாள்.27.10.2022ன்படி விலைப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி 30.10.2022 அன்று விலைப்புள்ளி பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | விலைப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | தாழ்வான பகுதிகளில் மழை வெள்ள நீரை வெளியேற்ற 45HP முதல் 100 HP குதிரை திறன் கொண்ட டீசல் எஞ்ஜின் மோட்டார்கள் மூலம் வெளியேற்றும் பணி | திரு.பாலசுந்தரம், மாங்காடு, சென்னை–600122. | மதிப்பீடு தொகையை விட 0.06% குறைவு |
| | | திருவாளர் தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக்ஷன்ஸ், மாங்காடு, சென்னை–600122. | மதிப்பீடு தொகையை விட 0.04% அதிகம் |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.பாலசுந்தரம், என்பவருக்கு மன்றத்தின் ஒப்பதலை எதிர்நோக்கி நகராட்சி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்தை நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பொது நிதியில் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்டுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.13**

மாங்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டு பொது நிதியின் கீழ் 27 வார்டுகளில் உள்ள தெருமின் விளக்குகள் மின்கட்டணத்தினை குறைக்கும் வகையில் அடர்மின் விளக்குளாக மாற்ற இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.50/2022/அ1, நாள்.07.11.2022ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி 27.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை LED தெருவிளக்குகளாக மாற்றுதல். | 33172000/– | திருவாளர் குமரன் இன்டர்டிரீஸ் | மதிப்பீடு தொகையை விட 4.94% அதிகம் |
| | | | திருவாளர் ஓரியன்ட் போல்ஸ் | மதிப்பீடு தொகையை விட 9.99% அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் அதிக விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருவாளர் குமரன் இன்டர்டிரீஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியை குறைத்து வழங்குமாறு இசைவு

கடிதம் (Negotiation Letter) அனுப்பப்பட்டுள்ளதுஎன்பதனை மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.**அலுவலக குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.14**

மாங்காடு நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகத்திற்கு ஏற்ப அனைத்து பிரிவு தலைமை அலுவலர்கள், பிரிவு உதவியாளர்கள் மற்றும் வசூல் மையம் ஆகிய பிரிவுகளின் அன்றாட நிர்வாக பணிகள் ஒருங்கிணைந்த மென்பொருள் மூலம் பணிகள் மேற்கொள்ளவும் திட்ட அறிக்கைகள், தயாரித்தல் கணினி மற்றும் அச்சுப்பொறி ஆகியன அத்தியாவசியமாக தேவைப்படுகின்றது. இவற்றை Intra Net மூலம் இணைத்து அவைகளுக்கு இணையவழி இணைப்பு வழங்கி அன்றாட UTIS பணிகளை தொய்வின்றி மேற்கொள்ளLocal Area Net work (LAN) அமைக்க பின்வரும் விவரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. எனவே பணியினை மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியலின் அடிப்படையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர் Income Solution க்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ | ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | UTIS பணிகளை ஒருங்கிணைந்த intra net arrangement | ரூ.2,60,000/– | Mrs.Income Solution | மதிப்பீடு தொகையை விடரூ.0.27% குறைவு |
| | | | Mrs.Sai Data Solution | மதிப்பீடு தொகையை விட ரூ.1.29% அதிகம். |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.15**

2021–2022ம் ஆண்டு மாங்காடு நகராட்சியில் மேற்கொண்ட சாதனைகள் குறித்து பின்வரும் நாளிதழ்களில் விளம்பரம் செய்தது பட்டியல் தொகை பொது நிதியில் வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

1. தினத்தந்தி நாளிதழ் – ரூ.35200/–
2. ஈவினிங் தமிழ்நாடு – ரூ.14490/–
3. மாலைத்தமிழகம் – ரூ.15330/–

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.16**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவ மழையினால் மழைநீர் தேங்கியுள்ள தாழ்வான பகுதிகளில் பொது மக்களுக்கு டிராக்டர் டேங்கர் கொண்டு வீடு வீடாக குடிநீர் விநியோகம் செய்ய இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.690/2022/அ1, நாள்.09.11.2022ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி 11.11.2022 அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | விலைப்புள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் மழைநீர் தேங்கியுள்ள தாழ்வான பகுதிகளில் பொது மக்களுக்கு டிராக்டர் டேங்கர் கொண்டு வீடு வீடாக குடிநீர் விநியோகம் செய்யும் பணி | திரு.சற்குணன் ஒத்தவாடைதெரு, மாங்காடு, சென்னை–600122. | மதிப்பீடு தொகையை விட 0.01% குறைவு |
| | | திரு.ஜி.கார்த்திகேயன் மாங்காடு, சென்னை–600122. | மதிப்பீடு தொகையை விட 0.02% அதிகம் |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.சற்குணன் என்பவருக்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

பொருள் எண்.17

மாங்காடு நகராட்சியில் 2022–2023ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள பொறியாளரால் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது இதன்படி கீழ்குறிப்பிட்டுள்ள பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சக்தி நகர் பிரிமியம் அவென்யூ ஆழ்துளை கிணறு, வசந்தபுரம் ஸ்டெப் ஸ்டோன் பகுதியில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி | 8.00 |
| 2 | நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளில் ரப்பீஸ் வைத்து சமன் செய்தல் | 9.50 |
| 3 | வெள்ளீஸ்வரன் கோயில் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் தரைதளத்தில் இ–சேவை மையம் அமைத்தல் பணி | 4.50 |
| 4 | பள்ளிக்கூட தெருவில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி | 3.30 |
| 5 | தென்காலனி பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி | 4.50 |
| 6 | ஒத்தவாடைத் தெருவில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி | 2.00 |

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.18**

மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் உத்திரவு ந.க.எண்.9672/2020/ஆ3, நாள்.13.07.2021ன்படி மாங்காடு நகராட்சிக்குட்பட்ட புல எண்.208ல் மொத்த விஸ்தீரணம் 0.31.0 ஹெக்டேர்ஸ் நிலத்தில் 250 ச. மீ துணை சுகாதார நிலையத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்கியதை தொடர்ந்து, நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்திரவு ந.க.எண்.32454/2021/CFC-1 நாள்.10.10.2022ன்படி நேஷன் ஹெல்த் மிஷன் 15வது நிதி ஆணையம் 2021–2022 ஆம் ஆண்டின் கீழ் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்படி துணை சுகாதார நிலைய கட்டடம் கட்ட 50% நிதி தொகை ரூ.15.00லட்சம் விடுவித்து உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து மாங்காடு நகராட்சி பொறியாளரால் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான பணிக்கு மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட புல எண்.208ல் புதிய சுகாதார நிலைய கட்டடம் அமைத்தல். | 30.00 |

எனவே மேற்காணும் சுகாதார நிலைய கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.19**

நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 35132/2022/CFC-1 நாள்.12.10.2022 ன்படி 15வது நிதிக்குழு ஆணையம் 2022–2023ல் ஆரோக்கிய மையம் (Urban Health and wellness center) அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து வரப்பெற்றுள்ளது. எனவே மாங்காடு நகராட்சியில் பின்வரும் விவரப்படியான பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான பணிக்கு மதிப்பீடு தயாரித்து வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | பட்டூர் ஹாஜி அலி நகர் பகுதியில் ஆரோக்கிய மையம் (Urban Health and wellness center) அமைத்தல் பணி. | 25.00 |

எனவே மேற்காணும் ஆரோக்கிய மைய (Urban Health and wellness center) கட்டடம் கட்டும் பணி மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

பொருள் எண்.20

மாங்காடு நகராட்சியில் பொதுநிதி 2022–2023ன் கீழ் அவசர அவசியம் கருதி பின்வரும் பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை ந.க.எண்.50/2022/அ1, நாள்.16.12.2022ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வரும் விவரப்படி 30.12.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சக்தி நகர் பிரிமியம் அவென்யூ ஆழ்துளை கிணறு, வசந்தபுரம் ஸ்டெப் ஸ்டோன் பகுதியில் குடிநீர் பைப்லைன் அமைத்தல் பணி | 800000/– | திருவாளர் வசந்தம் எலக்ட்டிகல்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.05%குறைவு |
| | | | திருவாளர் எஸ். வி. ஜே.பவர் ஒர்க்ஸ் | மதிப்பீடு தொகையை விட 1.50%அதிகம் |
| 2 | நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளில் ரப்பீஸ் வைத்து சமன் செய்தல் | 950000/– | திருவாளர் ஆர்.பி.அன் சன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.05%குறைவு |
| | | | திருவாளர் திவ்யலட்சுமி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.60%அதிகம் |
| 3 | வெள்ளீஸ்வரன் கோயில் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் தரைதளத்தில் இ–சேவை மையம் அமைத்தல் பணி | 450000/– | திருமதி.அமுதா | மதிப்பீடு தொகையை விட 0.04%குறைவு |
| | | | திரு.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 1.40%அதிகம் |
| 4 | பள்ளிக்கூட தெருவில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி | 330000/– | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.05%குறைவு |
| | | | திரு.அருண்குமார் | மதிப்பீடு தொகையை விட 1.16%அதிகம் |
| 5 | தென்காலனி பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி | 450000/– | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.05%குறைவு |
| | | | திரு.அருண்குமார் | மதிப்பீடு தொகையை விட 1.13%அதிகம் |
| 6 | ஒத்தவாடைத் தெருவில் அமைந்துள்ள பொது கழிப்பிடம் பராமரிப்பு பணி | 200000/– | திருவாளர் அமீமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.05%குறைவு |
| | | | திரு.அருண்குமார் | மதிப்பீடு தொகையை விட 1.50%அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும், செலவினங்களை பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும் இதற்கான செலவினம் பொதுநிதியிலிருந்நு மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு நகர மன்ற உறுப்பினர்கள் கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை அரசு / பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கவும் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டுஎண் | வேலையின் பெயர் |
|---|---|
| 3 | 1,2,3 ஆகிய ஒருகிணைந்த 3வார்டுகளுக்கும் ரேசன் கடை கட்டுவதற்கு சர்வே எண்.47ல் உள்ள இடத்தினை பரிசீலனை செய்து புதிய கட்டிடம் கட்டிதரக் கோரியது. |
| 10 | 10 வது வார்டு பகுதியில் மழையினால் சேதமடைந்த மூகாம்பிகை தெரு, சாந்திநாத் தெரு, பகவதி தெரு,வைகுண்டநாதன் தெரு,பத்மாவதி தெரு,சுந்தரேசன் தெரு, பாரஸ்நாத் தெரு,சக்ரா நகர் மெயின்ரோடு, பிரணாவதி தெரு ஆகிய சாலைகள்அமைத்து தரக்கோரியது |
| 23 | 23வது வார்டு பகுதிக்குட்பட்ட 10 தெருக்களில் மழைநீர் சேமிப்பு தொட்டி அமைத்து தரக்கோரியது, கே.கே.நகர் முதல் தெருவில் புதிய பைப்லைன் அமைத்தல்,பைப்லைன் பழுதுநீக்கம் ,பெயர் பலகை, புதிய குழாய்கள்,மேல் தெரு தண்ணீர் டேங்க் பகுதியினை சீரமைத்தல், மூன்று நவீன சுத்திகரிப்பு நிலையம்அமைத்தல், கே.கே. பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் பைப்லைனுடன் இணைத்தல், கே.கே.ஆழ்துளை போர் போடப்பட்டுள்ள பகுதியில் சுமார் 200மீட்டர் அளவில் III Phase அமைத்தல், கே.கே.நகர் 7வது தெரு பகுதியில் குடிநீர் பைப்லைன் மற்றும் சி.எஸ்.ஐ.பள்ளி தெருவில் குடிநீர் பைப்லைன் , 16 இடங்களில் தெருவிளக்கு சரி செய்ய மற்றும் கே.கே.நகர் சமுதாய கழிப்பிடம் அமைத்தும் மற்றும் ஆர்ச் அமைத்துர தர கோரியது. |
| 25 | எ.எஸ் நகர் மழைநீர் வடிகால் அமைத்து தரக்கோரியது. |
| 27 | 2 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தேக்கத்தொட்டி அமைத்து தரக்கோரியது. கணபதி நகர், லீலாவதி நகர், மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. அருணாச்சலம் நகர் பூங்கா சுற்றுசுவர் அமைத்தல் பணி. |

**அலுவலக குறிப்பு–** ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.22**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.19009/2022/SBM, நாள்.04.08.2022ன்படி Swacch Bharath Mission 2.O திட்டத்தின் கீழ் பின்வரும் விவரப்படியான பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து 10.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் பயோமைனிங் செயல்முறைகள் மூலம் ரகுநாதபுரம் மற்றும் ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் கொட்டப்படும் புராதன கழிவுகளை அகற்றுதல் பணி | 52.00 |

அலுவலக குறிப்பு–

ஒப்புதல்அளிக்கலாம்.

**பொருள் எண்.23**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.20860/2022/SBM, நாள்.05.12.2022ன்படி Swacch Bharath Mission 2.O திட்டத்தின் கீழ் பின்வரும் விவரப்படியான பணிக்கு நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளது , 25.01.2022 அன்று மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| Sl.No. | Name of the Work | Estimate Amount (Rs. in Lakhs) |
|---|---|---|
| 1 | **Construction of Micro compost Centre at Fathima Nagar-1** | 46.00 |
| 2 | **Construction of Micro compost Centre at Fathima Nagar-2** | 46.00 |
| 3 | **Construction of Resource Recovery Centre Building at Altis** | 43.00 |
| | **Total** | 135.00 |

அலுவலக குறிப்பு–

ஒப்புதல்அளிக்கலாம்.

**பொருள் எண்.24**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பின்வரும் விவரப்படியான இடங்களில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண | வேலையின் பெயர் | Length in 'M' | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | திருவள்ளுவர் சிட்டி முதல் திருமுருகன் நகர் வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1700.00 | 488.00 |
| 2 | இந்திர நகர் முதல் சக்ரா நகர் மெயின்ரோடு வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1140.00 | 334.00 |
| 3 | சக்ரா நகர், அப்பாவு நகர், பகவதி தெரு, காவல்நிலையம் சாலை , எஸ்.எஸ். கோயில்தெரு மற்றும் சக்ரா நகர் குறுக்கு தெரு வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1810.00 | 520.00 |
| 4 | மணலி ராமகிருஷ்ணா அவென்யூ மெயின் ரோடு, காமாட்சி அம்மன் நகர் அனெக்ஸ் முதல் அடிசன் நகர் மெயின்ரோடு வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1380.00 | 397.00 |
| 5 | குபேரன் தெரு,நரிவனம் சாலை, தந்தி கால்வாய் மற்றும் அடிசன் நகர் குறுக்கு தெரு வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 2070.00 | 595.00 |
| 6 | ஆர்.எஸ். ஆர்.கார்டன் முதல் மணப்பத்தான் கால்வாய், பஜார் தெரு முதல் இந்திரா நகர் மெயின்ரோடு வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | 1290.00 | 372.00 |
| 7 | சீனிவாசா நகர், ரகுநாதபுரம், வசந்தபுரம் மெயின்ரோடு முதல் | 1650.00 | 475.00 |

| | | | |
|---|---|---|---|
| | பரணிபுத்துர் கால்வாய் இணைப்பு வரை மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் | | |
| | **மொத்தம்** | **11040.00** | **3181.00** |

அலுவலக குறிப்பு–

ஒப்புதல்அளிக்கலாம்.

**பொருள் எண்.25**

மாங்காடு நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க consultant நியமனம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

ஒப்புதல்அளிக்கலாம்.

**பொருள் எண்.26**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பின்வரும் விவரப்படியானமூன்று இடங்களில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயாரித்து அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வார்டு எண். | தெருவின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 9 | எம்.ஜி.ஆர்.நகர் பகுதியில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி | 8.20 |
| | புதிய ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர்பம்ப் அமைத்தல் பணி | 4.80 |
| 24 | அண்ணாதெருவில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி | 8.20 |
| | புதிய ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர்பம்ப் அமைத்தல் பணி | 4.80 |
| 21 | மங்களபுரம் பகுதியில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி | 8.20 |
| | புதிய ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர்பம்ப் அமைத்தல் | 4.80 |
| 23 | கே.கே.நகர் பகுதியில் நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி | 8.20 |
| | புதிய ஆழ்துளை கிணறுடன் கூடிய பவர்பம்ப் அமைத்தல் | 4.80 |
| | **மொத்தம்** | **52.00** |

**அலுவலக குறிப்பு–**

மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.27**

மாங்காடு நகராட்சியில் வார்டு எண்.9 அரசினர் உயர்நிலை பள்ளி அருகில் கைலாசநாதர் கோவில் தெருவில் புதிய சாலைகள் அமைக்க மதிப்பீடு தயாரித்து அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.28**

மாங்காடு நகராட்சி வார்டு எண்.7 ஆதம் வில்லா மற்றும் மாருதி என்கிளேவ் பகுதியில் பின்வரும் விவரப்படியான பணிக்கு மதிப்பீடு தயாரித்து பணி மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | ஆதம் வில்லா பகுதியில் புதியதாக பைப் லைன் அமைத்தல் பணி | 1.50 |
| 2 | மாருதி என்கிளேவ் பகுதியில் உள்ள நவீன சுத்திகரிப்பு நிலையம் அருகில் பூங்கா அமைத்து வேலி அமைத்தல் பணி | 1.50 |

அலுவலக குறிப்பு–

மன்றம் ஏற்கலாம்.

**பொருள் எண்.29**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பட்டூர் பஸ்ஸ்டாண்ட் பகுதியில் பொது கழிப்பிடம் புணரமைப்பு பணி ரூ. 2,00,000/– லட்சத்தில் அமைக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதி அளிக்கலாம்

**பொருள் எண்.30**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட சர்வே எண்.436/2 பட்டாபடி 436/2Pt மொத்தம் 9583ச.அடி கொண்ட மனைப்பிரிவினை அங்கீகரிக்க சாலைக்கான 4527ச.அடி பரப்பளவு இடத்தினை மாங்காடு

நகராட்சிக்கு தானப்பத்திரமாக ஒப்படைத்து அதன் விவரம் தெரிவிக்க திரு.பி.லூர்துராஜ் பிரேம் (வி.எல்.சி.என்டர்பிரைசஸ் அன்டு ரியல் எஸ்டேட்) என்ற பெயரில் உள்ள சாலைக்கான இடத்தினை தானப்பத்திரம் மூலம் பெற்றுக்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பொருள் எண்.31**

மாங்காடு நகராட்சியில் மாண்டஸ் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாடகை அடிப்படையில் 40HP குதிரை திறன் கொண்ட டிராக்டர் மோட்டார் மூலம் மழைவெள்ள நீரை வெளியேற்றவும், அதற்கு தேவையான ஓஸ் பைப்புகள் 2'', 3'', 4'' மற்றும் 5'' பைப்புகள் சப்ளை செய்தல், 2 எண்ணிக்கை மரம் அறுக்கும் இயந்திரம் சப்ளை செய்தல் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான 4 எண்ணிக்கை டீசல் எஞ்ஜின்களை பழுதுநீக்கம் செய்தல் பணி ஆகிய பணிகளை அவசர அவசியம் கருதி மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**பொருள் எண்.32**

அரசாணை (நிலை) எண்.183 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.12.2022–ன்படி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சென்னை பெருநகர பகுதி கழிவுநீர் மேலாண்மை (வரன்முறை) விதிகள் 2022 வெளியிடப்பட்டுள்ளது அதனடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள தனியார் கழிவுநீர் அகற்றும் வாகனங்களை 13.01.2023க்குள் கண்டறிந்து மேற்படி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவம் மற்றும் வாகனங்கள் பதிவு செய்வதற்கான படிவங்கள் பெற்று உரிமம் வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சிக்குட்பட்ட கழிவுநீர் அகற்றும் வாகன உரிமையாளர்கள் ரூ.2000/–க்கு Managing Director, Chennai Metropolitan Water Supply and Sewerage Board என்ற பெயரில் வங்கி வரைவோலை எடுத்து விண்ணப்பித்து உரிமம் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சியில் பதிவு செய்யப்படாத லாரி உரிமையாளர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின் படி நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.33**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட அடிசன் நகர் சர்வே எண்.482/2A2A3, 482/2A2A4, 282/2A2A5, பத்திர பதிவின் படி சர்வே எண்.482/2A2A3A, 482/2A2A4A, 282/2A2A5A, 482/28, 482/29B, 482/29C, 482/29D, 482/30 மற்றும் 482/32 ஆகிய சர்வே எண்களில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும எண்.பிசி**1/1956/2012** நாள்.**31.05.2013**ன்படி தரை தளம் **1,2,3,4** மற்றும் **5** தளங்கள் கொண்ட **234** அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டு மாங்காடு பேரூராட்சி செயல்முறைகள் மூ.மு.எண்.**382/2013**, நாள்.**10.06.2013**ன்படி உரிய கட்டணங்கள் வசூலித்து கட்டிட உரிமம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும எண்.PP/NHRB/C/0421/2021, Dated.23.09.2022ன்படி ஏற்கனவே சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்தால் **31.05.2013**ல் வழங்கப்பட்ட திட்ட அனுமதி ரத்து செய்யப்பட்டு தற்போது கூடுதலாக **43** குடியிருப்புகள் சேர்த்து, தரைதளம் **1,2,3,4** மற்றும் **5** தளங்கள் கொண்ட **277** குடியிருப்புகளுக்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக மாங்காடு நகராட்சி நகரமைப்பு திட்ட அலுவலரால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு கட்டணங்கள் வசூலித்து திட்ட அனுமதி வழங்கவும், இதன் தொடர்ச்சியாக மாங்காடு நகராட்சியில் மேற்படி கட்டிடங்களுக்கு உரிய கட்டணங்கள் வசூலித்து கட்டிட உரிமம் வழங்க நகர்மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

உரிய கட்டணங்கள் வசூலித்து கட்டிட உரிமம் வழங்கலாம்.

**பொருள் எண்.34**

மாங்காடு நகராட்சியில் மாண்டஸ் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வாடகை அடிப்படையில் **40**HP குதிரை திறன் கொண்ட டிராக்டர் மோட்டார் மூலம் மழைவெள்ள நீரை வெளியேற்றவும், அதற்கு தேவையான ஓஸ் பைப்புகள் **2**'', **3**'', **4**'' மற்றும் **5**'' பைப்புகள் சப்ளை செய்தல், **2** எண்ணிக்கை மரம் அறுக்கும் இயந்திரம் சப்ளை செய்தல் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான **4** எண்ணிக்கை டீசல் எஞ்ஜின்களை பழுதுநீக்கம் செய்ய **08.12.2022** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | ஒப்பந்தபுள்ளிகள் அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் வாடகை அடிப்படையில் **40**HP குதிரை திறன் | திருவாளர் ஸ்ரீ ராதிகா எண்டர்பிரைசஸ், எண்.**77/9**, சிந்தாமணி கோயில் தெரு, | மதிப்பீடு தொகையை விட |

| | | | |
|---|---|---|---|
| | கொண்ட டிராக்டர் மோட்டார் மூலம் மழைவெள்ள நீரை வெளியேற்றவும், அதற்கு தேவையான ஓஸ் பைப்புகள் 2'', 3'', 4'' மற்றும் 5'' பைப்புகள் சப்ளை செய்தல், 2 எண்ணிக்கை மரம் அறுக்கும் இயந்திரம் சப்ளை செய்தல் மற்றும் நகராட்சிக்கு சொந்தமான 4 எண்ணிக்கை டீசல் எஞ்ஜின்களை பழுதுநீக்கம் செய்தல். | செங்கல்பட்டு–603002. | 0.53% அதிகம் |
| | | திருவாளர் லட்சுமி எண்டர்பிரைசஸ் எண்.2, கம்பர் தெரு, முத்துலட்சுமி நகர், சிட்லபாக்கம், சென்னை–64. | மதிப்பீடு தொகையை விட 0.02% குறைவு |

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திருவாளர் லட்சுமி எண்டர்பிரைசஸ், சென்னை–64 நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி அவசர அவசியம் கருதி உபகரணப்பொருட்கள் சப்ளை செய்தமைக்கும், அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.35**

மாங்காடு நகராட்சியில் 2022–2023ம் ஆண்டிற்கு புதியதாக பின்வரும் ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்ய கோரியது மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

கென்ஸ் டெக்னாலஜி எல்.எல்.பி., எண்.25, வசந்தம் நகர் மெயின் ரோடு, ஆவடி, சென்னை–71.

**பொருள் எண்.36**

மாங்காடு நகராட்சியில் பொதுநிதி 2022–2023ன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயாரித்து வரப்பெற்றுள்ள மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|
| 1 | விக்னேஷ் நகர் 1வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் பணி | 11.00 |
| 2 | விக்னேஷ் நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் பணி | 22.50 |
| 3 | கிருபாணந்தவாரியார் நகர் 1வது, 3வது குறுக்கு தெருக்கள் தார்சாலை அமைத்தல் பணி | 10.50 |
| 4 | கிருபாணந்தவாரியார் நகர் 2வது, 4வது குறுக்கு தெருக்கள் தார்சாலை அமைத்தல் பணி | 12.50 |
| 5 | ரகுநாதபுரம் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் பணி | 24.00 |
| 6 | சிவந்தி நகர் தார்சாலை அமைத்தல் பணி | 13.70 |
| 7 | காமாட்சியம்மன் 1வது தெரு தார்சாலை அமைத்தல் பணி | 13.00 |
| 8 | அடிசன் நகர் பூங்கா சாலை தார்சாலை அமைத்தல் பணி | 19.00 |
| 9 | அடிசன் நகர் ஹரினி இமாலயா அப்பார்ட்மென்ட் தார்சாலை அமைத்தல் பணி | 15.00 |
| 10 | வசந்தபுரம் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் பணி | 51.00 |
| 11 | வெங்கடேஷ்வரா நகர் தார்சாலை அமைத்தல் பணி | 18.80 |
| 12 | கிழக்கு காமாட்சியம்மன் நகர் தார்சாலை அமைத்தல் பணி | 40.20 |
| 13 | பாலாஜி அம்பாள் நகர் 5வது தெரு தார்சாலை அமைத்தல் பணி | 12.20 |
| 14 | பாலாஜி அம்பாள் நகர் 6வது தெரு தார்சாலை அமைத்தல் பணி | 7.30 |
| 15 | பாலாஜி அம்பாள் நகர் 7வது தெரு தார்சாலை அமைத்தல் பணி | 14.50 |
| 16 | பாலாஜி அம்பாள் நகர் 8வது தெரு தார்சாலை அமைத்தல் பணி | 13.30 |
| 17 | குபேரன் தெரு தார்சாலை அமைத்தல் | 14.50 |
| 18 | கணபதி தெரு தார்சாலை அமைத்தல் | 36.00 |
| 19 | பாலாஜி நகர் தார்சாலை அமைத்தல் | 16.20 |
| 20 | பிரணாவதி 1வது தெரு தார்சாலை அமைத்தல் | 14.40 |
| 21 | சுந்தரேசன் நகர் 1வது தெரு தார்சாலை அமைத்தல் | 29.80 |
| 22 | ஓம் சக்தி நகர் 2வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 7.30 |
| 23 | ராஜகுமாரி தெரு தார்சாலை அமைத்தல் | 8.10 |
| 24 | செந்தமிழ்நகர் மசூதி சாலை தார்சாலை அமைத்தல் | 10.40 |
| 25 | செந்தமிழ்நகர் முதல் சக்தி நகர் இணைப்பு சாலை தார்சாலை அமைத்தல் | 30.00 |
| 26 | சையத்சாதிக் நகர் 2வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 4.20 |
| 27 | கிருஷ்ணா நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.95 |
| 28 | காமராஜர் சாலை தார்சாலை அமைத்தல் | 10.50 |

| | | |
|---|---|---|
| 29 | மங்களபுரம் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 10.50 |
| 30 | திருப்பதி நகர் தார்சாலை அமைத்தல் | 11.50 |
| 31 | கே.கே.நகர் தார்சாலை அமைத்தல் | 32.20 |
| 32 | தோப்புதெரு தார்சாலை அமைத்தல் | 12.00 |
| 33 | பொன்னம்பலம் நகர் தார்சாலை அமைத்தல் | 16.20 |
| 34 | ஏ.எஸ்.நகர் தார்சாலை அமைத்தல் | 24.60 |
| 35 | ஹாஜி அலி நகர் தார்சாலை அமைத்தல் | 24.00 |
| 36 | முஸ்லீம் சுடுகாடு சாலை தார்சாலை அமைத்தல் | 8.10 |
| 37 | சார்லஸ் நகர் அனெக்ஸ் தார்சாலை அமைத்தல் | 6.30 |
| 38 | காயிதேமில்லத் நகர் தார்சாலை அமைத்தல் | 26.60 |
| 39 | பள்ளிவாசல் கிழக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 15.10 |
| 40 | சாந்தி நகர் 1வது, 2வது குறுக்கு தெருக்கள் தார்சாலை அமைத்தல் | 12.40 |
| 41 | சாந்தி நகர் 3வது, 4வது குறுக்கு தெருக்கள் தார்சாலை அமைத்தல் | 12.40 |
| 42 | பஜார் தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 13.00 |
| 43 | இந்திரா நகர் கலைஞர் தெரு மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 39.60 |
| 44 | திருப்பதி நகர் மெயின் ரோடு மற்றும் 1வது குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 16.50 |
| 45 | திருப்பதி நகர் மெயின் ரோடு மற்றும் 2வது குறுக்கு தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 9.50 |
| 46 | திருமா நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 11.00 |
| 47 | உருதுபள்ளி தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.50 |
| 48 | நரிவனம் சாலை 1வது 2வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.50 |
| 49 | நரிவனம் சாலை 3வது தெரு பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 4.00 |
| 50 | ஆதம் வில்லா பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 13.50 |
| 51 | விநாயகர் கோயில் தெரு தார்சாலை அமைத்தல் | 7.30 |
| 52 | சீனிவாச நகர் முதல் ஜனனி நகர் வரை தார்சாலை அமைத்தல் | 49.00 |
| 53 | சிவானந்தா நகர் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 11.50 |
| 54 | சீனிவாசா நகர் தார்சாலை அமைத்தல் | 43.40 |
| 55 | வி.எம்.எஸ்.நகர் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 2.90 |
| 56 | வன்னியர்பட்டு 1,2,3 குறுக்கு தெருக்கள் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 7.00 |
| 57 | வன்னியர்பட்டு 4,5,6 குறுக்கு தெருக்கள் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 8.10 |
| 58 | மேல்ரகுநாதபுரம் மெயின் ரோடு முதல் இந்திரா நகர் மெயின் ரோடு வரை பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 19.00 |
| 59 | சாந்தி நகர் மெயின் ரோடு தார்சாலை அமைத்தல் | 40.00 |
| 60 | எஸ்.கே.எம் நகர் 3வது குறுக்கு தெரு தார்சாலை அமைத்தல் | 2.00 |

**பொருள் எண்.37**

அரசாணை (நிலை) எண்.92, நாள்.24.06.2022ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் நகராட்சி வார்டு ஒன்றினை நான்கு பகுதி சபாவாக பிரித்து ஒவ்வொரு சபாவிற்கும் ஒரு உறுப்பினர் நியமிக்கவும், நகராட்சிக்கு அதிகாரம் அளிக்கப்படுள்ளது. அதன்படி மாங்காடு நகராட்சியில் உள்ள 27 வார்டுகளை ஒருவார்டுக்கு நான்கு சபாக்கள் வீதம் 108 பகுதி சபாவாக பிரிக்கவும் அதன் எல்லை விவரங்கள் பிரித்து மாவட்ட ஆட்சியருக்கு ஒப்புதல் பெற வேண்டியுள்ளதால் மேற்படி பணிகள் மேற்கொள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர் தட்சணாமூர்த்தி கன்ஸ்டிரக்ஷன்ஸ் என்பவருக்கு பட்டியல் தொகை ரூ.17625/—ஐ பொதுநிதியில் வழங்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்.38**

மாங்காடு நகராட்சியில் 2023ஆம் ஆண்டு புகையில்லா போகி குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த, மாங்காடு நகராட்சிக்குட்பட்ட முக்கிய பகுதிகளில் திருமதி.சுகந்திரமணி (பரணி ஸ்டேஜ்) நிறுவனத்தின் மூலம் தெருமுனை விழிப்புணர்வு நாடகங்கள் நடத்தியமைக்கான பட்டியல் தொகை ரூ.12000/— வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.